**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# எண்ணூரில் எண்ணெய், வாயு கசிவை ஏற்படுத்திய தொழிற்சாலைகள் மீது கிரிமினல் வழக்கு பதிந்து கைது செய்ய வேண்டும்: முன்னாள் நீதிபதி வலியுறுத்தல்

**சென்னை:** எண்ணூரில் எண்ணெய், வாயு கசிவை ஏற்படுத்திய தொழிற்சாலைகள் மீது கிரிமினல் வழக்குபதிவு செய்து, தொடர்புடையவர்களை கைது செய்ய வேண்டும் என்று பஞ்சாப், ஹரியாணா உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி கி.கண்ணன் வலியுறுத்தியுள்ளார். எண்ணூர் மக்கள் பாதுகாப்பு குழு சார்பில், எண்ணூரில் ஏற்பட்டு வரும் எண்ணெய் கசிவு மற்றும் வாயுக் கசிவு தொடர்பான கருத்து கேட்பு கூட்டம், முன்னாள் நீதிபதி கி.கண்ணன் தலைமையில் எண்ணூரில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பேசியதாவது: எண்ணூரில் இயங்கி வரும் தொழிற்சாலைகளால் இப்பகுதியில் காற்று மற்றும் நீர் மாசு அதிகமாக உள்ளது. இதன் காரணமாக குழந்தைகளுக்கு இளநரை, புற்றுநோய், கை விரல்கள் நீளமாக வளர்தல், ஆஸ்துமா உள்ளிட்ட சுவாசப் பிரச்சினை, தோல் நோய்,அடிக்கடி சளி பிடித்தல், மகளிருக்கு கருவுற முடியாமை, கர்ப்பப்பை புற்றுநோய், மார்பக புற்றுநோய் மாதவிடாய் பிரச்சினைஉள்ளிட்டவை ஏற்பட்டு வருகின்றன. சிறு வயதில் குழந்தைகள் இறக்கிறார்கள். இளைஞர்கள் இதய செயலிழப்பு மற்றும் மாரடைப்பால் இறக்கிறார்கள்.

எண்ணெய் கசிவால் முகத்துவாரப் பகுதியில் பிடிக்கும் மீன்கள்மற்றும் இறால்களை யாரும் வாங்குவதில்லை. இதனால் எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 26-ம் தேதி நள்ளிரவு ஏற்பட்ட வாயுக் கசிவால் மரண பயம் ஏற்பட்டது. இனி இந்த தொழிற்சாலைஇயங்கக் கூடாது. நிரந்தரமாக மூடவேண்டும். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டினர்.

பின்னர் முன்னாள் நீதிபதி கி.கண்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நீதி கேட்டு வருவோருக்கு நீதிமன்றம் உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கைஎனக்கு இருக்கிறது.ஆனால் நீதிமன்றத்தில் சக்தி இல்லை. மக்களிடம்தான் உள்ளது.

ஸ்டெர்லைட் விவகாரத்தில் நீதிமன்றங்கள் ஆலையை திறக்கத்தான் உத்தரவிட்டன. ஆனால்மக்கள் போராட்டம்தான் வெற்றிபெற்றது. முதலில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். அரசை எதிர்த்து கேள்வி கேட்க வேண்டும். அதன்மூலமே வெற்றி கிடைக்கும்.

வாயுக் கசிவு விவகாரத்தில் மக்களின் வலியை அரசு புரிந்துகொள்ளவில்லை. இந்த விவகாரம் தொடர்பாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இதுவரை உண்மையை மக்களுக்கு சொல்லவில்லை. இதனால் மக்களின் கோபம்தான் அதிகரிக்கும்.

போபால் விஷ வாயு விவகாரத்தில் தொழிற்சாலையின் பொறுப்பாளர் ஆன்டர்சன் மீது நடவடிக்கைஎடுக்காமல், வெளிநாட்டுக்கு தப்பிக்க வைத்தனர். நள்ளிரவில் குழந்தைகளுடன் மக்களை ஓடவிட்ட தொழிற்சாலை நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்காமல், வாயுகசிவுக்கான காரணம் கேட்க சென்றவர்கள் மீது வழக்கு பதிவது, அரசின் கடுமையான அலட்சியத்தை காட்டுகிறது.

முதலில் மாவட்ட ஆட்சியர், பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவ சிகிச்சை செலவையும், நிவாரண தொகையையும் தொழிற்சாலையிடம் வசூலித்திருக்க வேண்டும். இதைக்கூட செய்யவில்லை என்றால் என்ன நிர்வாகம் நடக்கிறது.

எண்ணெய், வாயு கசிவு விவகாரத்தில் தொழிற்சாலைமீது கிரிமினல்வழக்குபதிவு செய்து, தொடர்புடையவர்களை கைது செய்ய வேண்டும்.மக்கள் மீதான பொய் வழக்குகளைஅரசு திரும்பப்பெற வேண்டும். இப்பகுதியில் உள்ள 31 கிராமங்களில்வசிக்கும் மக்களிடம் உடல்நலம்சார்ந்த கணக்கெடுப்பு, முழு உடல்பரிசோதனை நடத்த வேண்டும்.

மக்களிடம் கேட்கப்பட்ட கருத்துகள் அடிப்படையில் அறிக்கை ஒன்றை தயாரித்து அரசுக்கு அளிக்கஇருக்கிறோம். இவ்வாறு அவர்கூறினார். இக்கூட்டத்தில் வழக்கறிஞர் நாகசைலா, பேராசிரியர் கல்பனா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## நடப்பாண்டில் 14 ராக்கெட்கள் செலுத்த இலக்கு: இஸ்ரோ தலைவர் சோம்நாத் தகவல்



**சென்னை:** நடப்பாண்டில் 12 முதல் 14 வரையிலான ராக்கெட் ஏவுதல் திட்டங்களை செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்தார். பிஎஸ்எல்வி சி-58 ராக்கெட் திட்டம் வெற்றி பெற்றபின் இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத் செய்தியாளர்களிடம் கூறியதாவது: புதிய ஆண்டில் சிறப்பான வெற்றியுடன் இஸ்ரோ பயணத்தை தொடங்கியுள்ளது. விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தின் சோதனை முயற்சி கடந்த ஆண்டு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நிகழாண்டில் குறைந்தது 2 சோதனை திட்டங்களை முன்னெடுக்க முடிவு செய்துள்ளோம்.

இதுதவிர நடப்பாண்டில் 12 முதல் 14 ராக்கெட்டுகளை விண்ணில் ஏவுவதற்கு திட்டமிட்டுள்ளோம். இன்சாட்-3டிஎஸ் செயற்கைக்கோள் மற்றும் இஸ்ரோ நாசா ஒருங்கிணைப்பில் உருவான ரேடார் செயற்கைக்கோள்கள் ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் அனுப்பப்பட உள்ளன. மேலும், சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட ஆதித்யா செயற்கைக்கோள் திட்டமிட்டபடி சீரான வேகத்தில் பயணித்து வருகிறது. எல்-1 புள்ளியை மையமாகக் கொண்ட சுற்றுப்பாதையை வரும் ஜனவரி 6-ம் தேதி சென்றடையும். அதன்பின் அடுத்தகட்ட ஆய்வுகளை விண்கலம் மேற்கொள்ளும்.

அதேபோல், பிஎஸ்எல்வி ராக்கெட்டின் இறுதிப் பகுதியான பிஎஸ்-4 இயந்திரத்தில் மாணவிகளால் வடிவமைக்கப்பட்ட சிறிய சாதனம் உட்பட 10 ஆய்வுக் கருவிகள் இடம் பெற்றுள்ளன. இத்தகைய முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

இந்த நேரத்தில் புதிய நிறுவனம், தொழில் முனைவோர், கல்வி மையங்கள், மாணவர்கள் உட்பட நாட்டில் உள்ள அனைவரும் தங்களது புதிய முயற்சியால் உருவாக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளை பிஎஸ்எல்வி உடன் இணைத்து அனுப்ப அழைப்புவிடுக்கிறேன்.

மேலும், பிஎஸ்-4 இயந்திரத்தை 350 கி.மீட்டருக்கு கீழான சுற்றுப்பாதைக்கு கொண்டு வரும்போது விண்வெளி கழிவுகளை ஏற்படுத்தாமல் இருக்க முடியும். குலசேகரப்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

மத்திய அரசின் திறன் இந்தியா திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் அடல் டிங்கரிங் அறிவியல் ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. அதன்படி திருச்சி, மண்ணச்சநல்லூர் அரசினர் மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் உள்ள ஆய்வகம் மூலமாக மாணவிகளுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

அதன் ஒருபகுதியாக பிஎஸ்எல்வி சி-58 ராக்கெட் ஏவுதலைப் பார்வையிட மாணவிகள் ஸ்ரீஹரிகோட்டாவுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். இந்நிகழ்வு பெரிதும் பயனுள்ளதாக இருந்ததாக மாணவிகள் தெரிவித்தனர்.

## அசலான இசையையும் அசலான கலைஞர்களையும் மியூசிக் அகாடமி எப்போதும் கவுரவிக்கும்: மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபால்கிருஷ்ணகாந்தி புகழாரம்




சென்னை மியூசிக் அகாடமியின் 97-வது இசைவிழாவின் விருது வழங்கும் நிகழ்ச்சி (சதஸ்) நேற்று

டிடிகே கிருஷ்ணமாச்சாரி அரங்கில் நடைபெற்றது. விருது பெற்ற இசைக் கலைஞர் பாம்பே ஜெயஸ்ரீ உடன் மியூசிக் அகாடமியின் தலைவர் என்.முரளி, மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி.

**சென்னை:** சென்னை மியூசிக் அகாடமியின் 97-வது இசைவிழாவின் விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்ற மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி, அசலான இசையையும் அசலான கலைஞர்களையும் எப்போதும் மியூசிக் அகாடமி கவுரவிக்கும் என்று புகழாரம் சூட்டினார்.

சென்னை மியூசிக் அகாடமியின் 97-வது இசைவிழாவின் விருது வழங்கும் நிகழ்ச்சி (சதஸ்) நேற்று டிடிகே கிருஷ்ணமாச்சாரி அரங்கில் நடைபெற்றது. இதில், சங்கீத கலாநிதி விருதை பாம்பே ஜெய□க்கும், சங்கீத கலா ஆச்சார்யா விருதை பல்குளங்கரா கே.அம்பிகாதேவி, மிருதங்க வித்வான் கே.எஸ்.காளிதாஸுக்கும், டி.டி.கே.விருதை தவில் வித்வான் திருநாகேஸ்வரம் டி.ஆர்.சுப்ரமணியன், வித்வான் பி. சற்குருநாதன் ஓதுவாருக்கும், இசை அறிஞர் விருதை வித்வான் அரிமளம் டாக்டர் எஸ்.பத்மநாபனுக்கும் மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி வழங்கி கவுரவித்தார்.

கலைஞர்களையும் மியூசிக் அகாடமியின் செயல்பாடுகளையும் வாழ்த்தி அவர் பேசியதாவது: மியூசிக் அகாடமி இத்தனை ஆண்டுகள் இசைக் கலைஞர்களுக்கு தொடர்ந்து விருதுகளை அளித்து கவுரவித்து வருவது எளிதான காரியம் அல்ல. இத்தகைய அரிய செயலுக்குக் காரணம், காலத்துக்கேற்ற சிந்தனைகளோடு இருக்கும் மியூசிக் அகாடமியின் தலைவர் நரசிம்மன் முரளி. அவரிடம் இயல்பிலேயே இருக்கும் இரண்டு நல்ல விஷயங்கள் பொறுமை, விவேகம்.

**கச்சேரியே ஐஏஎஸ் தேர்வுதான்:** தங்க சங்கிலியில் கோத்த மணிகளைப்போல் அமர்ந்திருக்கும் கலைஞர்கள், அதிலும் அதில் பதக்கமாய் ஜொலிக்கும் சங்கீத கலாநிதி பாம்பே ஜெயஸ்ரீ மற்றும் கலா ஆச்சார்யா, டி.டி.கே. இசை அறிஞர் விருதுகள் பெற்ற கலைஞர்களுக்கு வாழ்த்துகள்.

செம்மங்குடி சீனிவாசய்யர் ஒருமுறை என்னிடம், "நீ ஒருமுறை பரீட்சை எழுதிவிட்டு ஐஏஎஸ் ஆகிவிட்டாய். ஆனால் எனக்கு ஒவ்வொரு கச்சேரியும் ஐஏஎஸ் தேர்வுபோல்தான்" என்றார். அசலான இசையையும் அசலான

கலையையும் கலைஞர்களையும் கவுரவிப்பதுதான் மியூசிக் அகாடமி. மியூசிக் அகாடமி என்றாலே அசல்தான்.

முன்னதாக வரவேற்புரையாற்றிய மியூசிக் அகாடமியின் தலைவர் என்.முரளி, “அகிம்சையை போதித்த மகாத்மா காந்தி மற்றும் ராஜகோபாலாச்சாரியாரின் பேரனும் மேற்கு வங்க முன்னாள் ஆளுநருமான கோபால்கிருஷ்ண காந்தி இந்த விழாவில் பங்கெடுக்க இசைந்ததில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்” என்றார்.

**குருமார்களுக்கு நன்றி:** ஏற்புரை ஆற்றிய சங்கீத கலாநிதி விருது பெற்ற பாம்பே ஜெய□, அவரின் பெற்றோருக்கும்,குருமார்களான டி.ஆர்.பாலாமணி, வயலின் மேதை லால்குடி ஜெயராமனுக்கும் மியூசிக் அகாடமிக்கும் தனது நன்றியை தெரிவித்தார்.

கலா ஆச்சார்யா, டி.டி.கே. விருது பெற்றவர்களின் சார்பாக இசை அறிஞர் விருது பெற்ற அரிமளம் டாக்டர் எஸ்.பத்மநாபன் ஆற்றிய ஏற்புரையில், "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட திருக்குறளில் இருந்து பெருமை என்னும் அதிகாரத்தில் ஒரு குறள் எனக்கு நினைவுக்கு வருகிறது. பெருமை உடையவர்கள் சேவையை ஆற்றியிருக்கின்றனர். அருமையானவர்கள் விருது பெற்றிருக்கின்றனர். இத்தகைய அருமையானவர்களை தேர்ந்தெடுத்த பெருமையானவர்கள் மியூசிக் அகாடமியின் தலைவர் மற்றும் அதன் பிரதிநிதிகள்" என்றார். நிகழ்ச்சியை மியூசிக் அகாடமியின் செயலாளர் வி.ஸ்ரீராம் தொகுத்தளித்தார்.

## இளையோர் செஸ் போட்டியில் தங்கம் வென்றார் ஷர்வானிகா



**சென்னை:** ஆசிய இளையோர் செஸ் போட்டியில் ஷர்வானிகா தங்கப் பதக்கம் வென்றாார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள அல் ஐன் நகரில் ஆசிய இளையோர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது.

சர்வதேச செஸ் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இணைந்து நடத்திய இந்த தொடரில் 21 நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

இதில், ஹட்சன் செஸ் அகாடமியில் பயிற்சி பெற்ற 8 வயது மாணவியான அரியலூர் மாவட்டம் உடையார்பாளையத்தைச் சேர்ந்த ஷர்வானிகா, யு-8 கிளாசிக்கல் பிரிவில் வெள்ளிப் பதக்கமும், யு-8 ரேபிட் பிரவு மற்றும் யு-8 பிளிட்ஸ் பிரிவில் தங்கப் பதக்கங்களும் வென்றார்.

## 196 பேருக்கு ஜேஎன். 1 வகை கரோனா தொற்று: நாடு முழுவதும் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 4,394 ஆக உயர்வு




**புதுடெல்லி:** நாடு முழுவதும் இதுவரை 196 பேரிடம் ஜேஎன்.1 வகை கரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாநிலங்கள் பட்டியலில் புதிதாக ஒடிசாவும் இணைந்துள்ளது.

ஒமிக்ரான் வைரஸின் துணைதிரிபான ஜேஎன்.1 வகை கரோனாதொற்று, நம் நாட்டில் முதன்முதலாக கேரளாவில் கண்டறியப்பட்டது. தற்போது 10 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 196 பேரிடம் இத்தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இந்திய கரோனா மரபியல் கூட்டமைப்பு (இன்சாகாக்) புள்ளிவிவரப்படி கேரளா (83), கோவா (51), குஜராத் (34), கர்நாடகா (8), மகாராஷ்டிரா (7), ராஜஸ்தான் (5), தமிழ்நாடு (4), தெலங்கானா (2), ஒடிசா (1), டெல்லி (1) ஆகியவை ஜேஎன்1 வகை கரோனாபட்டியலில் உள்ளன. இப்பட்டியலில் ஒடிசா புதிதாக இணைந்துள்ளது.

இன்சாகாக் புள்ளிவிவரப்படி நவம்பரில் 17 பேரிடமும் டிசம்பரில் 179 பேரிடமும் இத்தொற்று கண்டறியப்பட்டுள்ளது. ஜேஎன்.1 வகை வைரஸ் தொற்றை மிக வேகமாகப் பரவும் தொற்றாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

சமீபத்திய வாரங்களில் சிங்கப்பூர், அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இத்தொற்று வேகமாகப் பரவி வருகிறது. நம் நாட்டில் கரோனா தொற்று தற்போது அதிகரித்து வரும் வேளையில், ஜேஎன்.1 வகை தொற்று குறித்து மாநிலங்கள் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும் என மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

**636 பேருக்கு கரோனா:** இந்நிலையில் மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று காலை வெளியிட்ட புள்ளிவிவரத்தில் கூறியிருப்பதாவது: நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 636 பேருக்கு கரோனா தொற்றுஏற்பட்டுள்ளது. இதனால் சிகிச்சையில் இருப்போர் எண்ணிக்கை 4,394 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் கேரளாவில் இருவர், தமிழ்நாட்டில் ஒருவர் என 3 பேர் உயிரிழந்தனர். கடந்த ஆண்டு டிசம்பர் 5-ம் தேதி வரை தினசரி புதிய நோயாளிகள் எண்ணிக்கை இரட்டை இலக்கத்தில் குறைந்திருந்தது. ஆனால் கரோனா புதிய திரிபு மற்றும் குளிர்காலம் வந்த பிறகு தினசரி புதிய நோயாளிகள் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது.

கடந்த 2020-ம் ஆண்டின் முற்பகுதியில் தொடங்கிய கரோனா தொற்றுநோய் உச்சத்தில் இருந்தபோது தினசரி பாதிப்பு லட்சங்களில் இருந்தது. கடந்த 4

ஆண்டுகளில் நாடு முழுவதும் கரோனா தொற்றுக்கு 5.3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். குணமடைந்தோர் விகிதம் 98.81 சதவீதமாகவும், உயிரிழப்பு விகிதம்1.19 சதவீதமாகவும் உள்ளது. இவ்வாறு சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

## எக்ஸ்போசாட் அதிநவீன செயற்கைக் கோள் நிலைநிறுத்தம்: பிஎஸ்எல்வி-சி58 பயணம் வெற்றி



ஆந்திர மாநிலம் ஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்தின் ஏவுதளத்தில் இருந்து எக்ஸ்போசாட் செயற்கைக் கோளுடன் நேற்று விண்ணில் பாய்ந்த பிஎஸ்எல்வி-சி58 ராக்கெட்.படம்: பிடிஐ

**சென்னை:** கருந்துளை, நியூட்ரான் விண்மீன்கள் தொடர்பான வானியல் ஆய்வுக்காக, எக்ஸ்போசாட் அதிநவீன செயற்கைக் கோள், பிஎஸ்எல்வி சி58 ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. இது 2024-ம் ஆண்டின் சிறந்த தொடக்கம் என்று பிரதமர் மோடிபாராட்டு தெரிவித்துள்ளார்.

விண்வெளியில் புறஊதா கதிர்கள், எக்ஸ் கதிர்களின் இயக்கம் மற்றும் நட்சத்திரங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) சார்பில் அஸ்ட்ரோசாட் செயற்கைக் கோள்கடந்த 2015-ம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்பட்டது. இது கடந்த 8 ஆண்டுகளாக பல்வேறு அரிய தகவல்களை வழங்கி வருகிறது.

இதன் அடுத்த கட்டமாக, கருந்துளை, நியூட்ரான் விண்மீன்கள் போன்றவை குறித்து இன்னும் ஆழமாக புரிந்து கொள்வதற்காக எக்ஸ்போசாட் (X-ray Polarimeter Satellite - XPoSat) எனும் அதிநவீனசெயற்கைக் கோளை இஸ்ரோ வடிவமைத்தது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்தின் ஏவுதளத்தில் இருந்து பிஎஸ்எல்வி-சி58 ராக்கெட் மூலம் எக்ஸ்போசாட் செயற்கைக் கோள் நேற்று காலை 9.10 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. 22 நிமிட பயணத்துக்கு பிறகு, பூமியில்இருந்து 650 கி.மீ உயரம் கொண்டகுறைந்த தாழ்வட்ட சுற்றுப்பாதையில் 6 டிகிரி சாய்ந்த நிலையில் எக்ஸ்போசாட் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.

எக்ஸ்போசாட் செயற்கைக் கோள் 469 கிலோ எடை கொண்டது. இதன் ஆயுள் காலம் 5 ஆண்டுகள். இதில் எக்ஸ்பெக்ட் (எக்ஸ்ரேஸ்பெக்ட்ரோகிராபி), போலிக்ஸ் (எக்ஸ்ரே போலரி மீட்டர்) ஆகிய2 சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பெங்களூருவில் உள்ளராமன் ஆராய்ச்சி நிறுவனமும், யு.ஆர்.ராவ் செயற்கைக் கோள்மையமும் இவற்றை உருவாக்கிஉள்ளன. விண்வெளியில் உள்ள கருந்துளைகளில் இருந்து வெளியேறும் எக்ஸ் கதிர்களின் துருவ முனைப்பு அளவு, கோணத்தை அளவிடுதல், நியூட்ரான் விண்மீன்களில் (இறந்த நட்சத்திரம்) இருந்து வெளியாகும் கதிரியக்கம், கருந்துளை வாயுக்களின் திரள் (நெபுலா), விண்மீன் வெடிப்பு (சூப்பர் நோவா) உள்ளிட்ட பல்வேறு அம்சங்களின் நிலை குறித்து இந்த சாதனங்கள் ஆராயும்.

இதுதவிர, பிஎஸ்எல்வி ராக்கெட்டின் இறுதி பகுதியான பிஎஸ்-4இயந்திரத்தில் ‘போயம்’ (PSLV Orbital Experimental Module - POEM) எனும் பரிசோதனை முயற்சியும் 3-வது முறையாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. அதாவது, பிஎஸ்-4 இயந்திரத்தை இருமுறை நிறுத்தி மீண்டும் இயக்கி, அதன் உயரம் 350 கி.மீ.க்கு கீழே கொண்டுவரப்பட்டது. அந்த இயந்திரத்தில் இந்திய ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள் தயாரித்த 10 ஆய்வு கருவிகள் இடம்பெற்றுள்ளன. இவை பூமியை வலம்வந்தபடி அடுத்த சில மாதங்களுக்கு பல ஆய்வுகளை மேற்கொள்ளும்.

பிஎஸ்-4 இயந்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள 10 சாதனங்களில் வீசாட்எனும் கருவி, கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள லால்பகதூர் சாஸ்திரி மகளிர் தொழில்நுட்ப கல்வி நிறுவன மாணவிகளால் வடிவமைக்கப்பட்டது. இது பருவநிலை மாற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளும்.

கருந்துளை பற்றிய ஆய்வுக்கு அமெரிக்கா - இத்தாலி கூட்டு முயற்சியில் ஐஎக்ஸ்பிஇ எனும் செயற்கைக் கோள் கடந்த 2021-ம் ஆண்டில் அனுப்பப்பட்டது. அதன்பிறகு 2-வது முறையாக, இந்தியாதான் இந்த ஆய்வில் களமிறங்கி உள்ளது. அமெரிக்காவின் ஐஎக்ஸ்பிஇ செயற்கைக் கோள் மதிப்பு ரூ.1,500 கோடி. இந்தியாவின்எக்ஸ்போசாட் மதிப்பு சுமார் ரூ.250 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரோ இதற்கு முன்னர் அனுப்பிய அஸ்ட்ரோசாட் செயற்கைக் கோள், எக்ஸ் கதிர்கள் எங்கிருந்துவருகின்றன என்பதை மட்டுமே ஆராயும். தற்போது அனுப்பப்பட்டுள்ள எக்ஸ்போசாட் செயற்கைக்கோள், கதிர்களின் நீண்டகாலசெயல்பாடுகளை புரிந்துகொள்ள ஏதுவாக அவற்றின் துருவ முனைப்பு உட்பட முழுமையாக அவற்றை ஆராயும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

**பிரதமர் மோடி பாராட்டு:** எக்ஸ்போசாட் செயற்கைக் கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதற்காக, இஸ்ரோவுக்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

‘இஸ்ரோவின் வெற்றி பயணம் 2024-ம் ஆண்டுக்கு ஒரு சிறந்த தொடக்கம். இந்தியாவை முன்னெப்போதும் இல்லாத உயரத்துக்கு கொண்டு செல்லும் விஞ்ஞானிகள் உட்பட ஒட்டுமொத்த இஸ்ரோ பணியாளர்களுக்கும் எனது வாழ்த்துகள்’ என்று அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

## ஜப்பானில் பயங்கர நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கையால் மக்கள் பீதி - 16 அடி உயரத்துக்கு அலைகள் எழுந்தன



ஜப்பானின் வாஜிமா நகரில் நிலநடுக்கத்தால் தரையில் விரிசல் ஏற்பட்டுள்ளது. வீடு, கட்டிடங்களில் இருந்து வெளியேறிய மக்கள் பொது இடத்தில் குவிந்துள்ளனர்.படம்: பிடிஐ

**டோக்கியோ:** ஜப்பானில் நேற்று பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஜப்பானின் கடலோர பகுதிகளில் 16 அடி உயரத்துக்கு சுனாமி அலைகள் எழுந்ததால் மக்கள் பீதி அடைந்தனர்.

ஜப்பானின் மேற்கு பகுதியான இஷிகாவா மாகாணம், அனாமிசு நகரை மையமாக கொண்டு நேற்று பிற்பகல் 4 மணி அளவில் (இந்திய நேரப்படி மதியம் 12.40) சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. பூமிக்கு அடியில் 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த பூகம்பம் ரிக்டர் அலகில் 7.6 ஆக பதிவானது. அடுத்த சில நிமிடங்களில் 6.2 ரிக்டர், 5.2 ரிக்டர் என அடுத்தடுத்து பூகம்பம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து 80 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டன.

இதன் காரணமாக அனாமிசு, சுசூ, வாஜிமா உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் ஆயிரக்கணக்கான வீடுகள், கட்டிடங்கள் இடிந்தன. இஷிகாவா மாகாணத்தின் பல பகுதிகளில் மின் விநியோகம் முழுமையாக தடைபட்டது.

மிகப்பெரிய அளவில் பூகம்பம் ஏற்பட்டதால் இஷிகாவா, நிகாட்டா, டோயாமா ஆகிய மாகாணங்களின் கடற்கரை பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை

விடுக்கப்பட்டது. கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு எச்சரிக்கைவிடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்தனர்.

இந்த 3 மாகாணங்களில் கடற்கரை பகுதிகளில் 3 அடி முதல் 16 அடி உயரம் வரை சுனாமி பேரலைகள் எழுந்தன. பல்வேறு கிராமங்கள், நகரங்களுக்குள் கடல்நீர் புகுந்தது. சில இடங்களில் மிகப்பெரிய அளவில் தீ விபத்துகள் நேரிட்டு உள்ளதாக அமைச்சர் யோஷிமா ஹயாசி தெரிவித்தார்.

அடுத்த சில நாட்களில் மிகப்பெரிய பூகம்பங்கள் தொடரக்கூடும். சுனாமி அச்சுறுத்தலும் தொடர்ந்து நீடிக்கக்கூடும். பூகம்ப,சுனாமி அச்சுறுத்தல் ஒரு வாரம்வரை நீடிக்கவும் வாய்ப்பு இருக்கிறது என்று ஜப்பான் புவியியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இதனால் மக்கள் அச்சம் அடைந்தனர்.

புகுஷிமா அணு மின் நிலைய பகுதியிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது. அங்கு ரிக்டர் அலகில்3 ஆக பதிவான நிலநடுக்கத்தால் அணு மின் நிலையத்துக்கு எவ்விதபாதிப்பும் ஏற்படவில்லை.

இஷிகாவா மாகாணத்தில் இருந்து 560 கி.மீ. தொலைவில் உள்ள தலைநகர் டோக்கியோவிலும் நிலஅதிர்வுகள் உணரப்பட்டன. வடகொரியா, தென்கொரியா, ரஷ்யாவின் சில பகுதிகளுக்கும் அந்தந்த அரசுகள் சார்பில் சுனாமிஎச்சரிக்கை விடுக்கப்பட்டது.

## டிசம்பர் மாத ஜிஎஸ்டி வசூல் ரூ.1.64 லட்சம் கோடி




**புதுடெல்லி:** சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) வாயிலாக சென்ற டிசம்பரில் ரூ.1.64 லட்சம் கோடி வசூலாகியுள்ளது என நிதியமைச்சகம் நேற்று தெரிவித்தது. இதுகுறித்து மேலும் கூறியதாவது:

கடந்த 2022 டிசம்பரில் ஜிஎஸ்டி வசூல் 1.49 லட்சம் கோடியாக இருந்தது. இந்த நிலையில், 2023 டிசம்பரில் ஜிஎஸ்டி வசூல் 10 சதவீதம் அதிகரித்து ரூ.1.64 லட்சம் கோடியைத் தொட்டுள்ளது. 2023 ஏப்ரல்-டிசம்பரில் மொத்த ஜிஎஸ்டி வசூல் 12 சதவீதம் உயர்ந்து ரூ.14.97 லட்சம் கோடியாக இருந்தது. இது, 2022-ம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூ.13.40 லட்சம் கோடியாகஇருந்தது.

சென்ற டிசம்பரில் மொத்த ஜிஎஸ்டி வருவாய் ரூ.1,64,882 கோடியாக இருந்த நிலையில், மத்திய ஜிஎஸ்டி ரூ.30,443 கோடியாகவும், மாநில ஜிஎஸ்டி ரூ.37,935 கோடியாகவும், ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி ரூ.84,255 கோடியாகவும், செஸ் ரூ.12,249 கோடியாகவும் இருந்தது. இவ்வாறு நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

## சென்னையில் ஜன. 7, 8-ல் உலக முதலீட்டாளர் மாநாடு: முதல்வர் ஸ்டாலின் அழைப்பு



**சென்னை:** சென்னையில் ஜனவரி 7, 8 -ம் தேதிகளில் பிரம்மாண்டமாக நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் இணையும்படி முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழகத்தை 2030-ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றுவதற்கான இலக்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிர்ணயித்துள்ளார். அதன் அடிப்படையில், தொழில்துறையில் பல்வேறு பிரிவுகளில் முதலீடுகளை ஈர்க்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் வரும் ஜனவரி 7, 8 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற உள்ளது.

இதில் முந்தைய முதலீட்டாளர்கள் மாநாடுகளை விஞ்சும் வகையில் முதலீடுகளுக்கான ஒப்பந்தங்கள் பெறப்பட உள்ளன. இதற்காக, குறு, சிறுதொழில்துறை சார்பில் மாவட்டங்கள் தோறும் முதலீட்டாளர்கள் சந்திப்பு நடத்தப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுதவிர, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கான ஆயத்தப்பணிகளை தற்போது தமிழக தொழில்துறை செய்து வருகிறது. இந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதள பக்கத்தில், ‘‘2024-ம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு தொடங்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், அதுகுறித்த ஆர்வம் மென்மேலும் பெருகி வருகிறது. 2030-ம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் ஆவதற்கான செயல் திட்டத்தை உலக முதலீட்டாளர் மாநாட்டில் வெளியிடத் தமிழகம் மும்முரமாகிறது.

தமிழகத்தின் துடிப்பு மிகுந்த தொழிற்சூழலை வெளிக்காட்டும் பிரம்மாண்டமான மாநாட்டில் வரும் ஜன 7, 8 தேதிகளில் இணைந்திடுங்கள்'' என்று தெரிவித்துள்ளார்.

EVA STALIN IAS ACADEMY